

தாவடி

## திரு. சிவக்கொழுந்து சச்சிதானந்தன்

அவர்களின்


# நினைவு அஞ்சலி



28—6—80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்  22-2-1954

விண்: 29-5-1980

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தோத்திரத் திரட்டு

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம்:

### முதலாம்திருமுறை:

இடம் திருவலிவலம் திருச்சிற்றம்பலம் பண்-வியாழக்குறிஞ்சி

பிடியதனுருவுமை கொளமிகுகரியது
வடிகொடு தனதடி வழிபடுமவரிடர்
கடிகணபதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறையிறையே.

### இரண்டாம்திருமுறை:

இடம் திருக்கேதீச்சரம் பண்-நட்டராகம்

பாடல்வீணையர் பலபலசரிதைய ரெருதுகைத் தருநட்டம்
ஆடல்பேணுவர் அமரர்கள் வேண்டநஞ்சுண்டிருள் கண்டத்தர்
ஈடமாவது இருங்கடற்கரையினி லெழில்திகழ் மாதோட்டம்
கேடிலாத் கேதீச்சரந் தொழுதெழக் கெடுமிடர்வினைதானே.

### மூன்றாம்திருமுறை

இடம் திருகோணமலை பண்-புறநீர்மை

தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலையமர்ந்தாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

## நாலாம் திருமுறை

இடம் திருவாரூர் பண்-காந்தாரம்

ஆயிரந்தாமரை போலும் ஆயிரஞ்சேவடியானும்
ஆயிரம் பொன்வரைபோலும் ஆயிரந்தோளுடையானும்
ஆயிரஞாயிறுபோலும் ஆயிரநீண்முடியானும்
ஆயிரம் பேருகந்தானும் ஆரூரமர்ந்த அம்மானே.

## ஐந்தாந் திருமுறை

இடம் திருவையாறு திருக்குறுந்தொகை

நெஞ்சம் என்பதோர் நீள்கயந்தன்னுளே
வஞ்சம் என்பதோர் வான்சுழிப்பட்டு நான்
துஞ்சும் போழ்து நின்னுமத் திரு எழுத்
தஞ்சம் தோன்ற அருளாய் ஐயாறரே.

## ஆறாந்திருமுறை:

இடம் திருக்காளத்தி திருத்தாண்டகம்

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்
வாயாரத்தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ்சிரத்தின் மேலான்
ஏழண்டத்தப்பாலான் இப்பால் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப்போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத்துச்சியுள்ளான்
காளத்தியானவனென் கண்ணுளானே.

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

## ஏழாந்திருமுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் திருவாரூர் பண்: தக்கேசி

பொன்னுமெய்ப்பொருளுந்தருவானைப்
போகமுந்திருவும் புணர்ப்பானைப்
பின்னையென்பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாந்தவிரப்பணிப்பானை
இன்னதன்மையனென்றறி யொண்ணா
எம்மானை யெளிவந்தபிரானை
அன்னம் வைகும் வயற்பழனத்தணி
யாரூரானை மறக்கலுமாமே.

இடம் திருக்கேதீச்சரம் பண்-நட்டபாடை

மூவரென இருவரென முக்கண்ணுடைமூர்த்தி
மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்டநன்
(னகரில்
பாவம்வினையறுப்பார்பயில் பாலாவியின்கரைமேல்
தேவனெனையாள்வான் திருக்கேதீச்சரத்தானே

இடம் திருப்புக்கொளியூரவிநாசி பண்-குறிஞ்சி

உரைப்பாருரையுகந்துள்கவல்லார் தங்களுச்சியாய்
அரைக்காடரவா ஆதியுமந்தமுமாயினாய்
புரைக்காடுசோலைப்புக் கொளியூரவிநாசியே
கரைக்கான் முதலையைப்பிள்ளை தரச் சொல்லு
(காலனையே.

## மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்

### எட்டாந்திருமுறை

சிந்தனைநின் றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கியாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்களார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனியனேற்கே.

ஒன்பதாந்திருமுறை:

திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண் குளிர்ந்தனவே.

திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

பத்தாந்திருமுறை

திருமூலர் திருமந்திரம்;

திருவடியே சிவமாவது தேரில்
திருவடியே சிவலோகஞ் சிந்திக்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளிவார்க்கே.

## பதினொராம் திருமுறை
## நம்பியாண்டார்நம்பி

என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்-புன்னை
விரசுமகிழ் சோலை வியன்நாரை யூர்முக்கண்
அரசுமகிழ் அத்தி முகத்தான்.

## பன்னிரண்டாந்திருமுறை
## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணம்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் றனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தை
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிக்கக் கண்டார்கள்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.!

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தாவடி

# திரு. சிவக்கொழுந்து சச்சிதானந்தன்

அவர்களின்

## நினைவு மலர்

### திதி வெண்பா

ஆண்டெண்பரௌத்திரியில் ஆம்திங்கள் வைகாசி
பூண்டதிதி பூரணையும் பொருந்திடவே-வேண்டியரன்
பாதமலர் சசசி பற்றினன்காண் பாருலகை
ஏதமென இதயத் திகழ்ந்து.

### நேரிசை ஆசிரியப்பா,

பூமகள் நாமகள் பொங்கிக் களிக்கும்
சேமநல் வாழ்வில் திளைக்கும் செல்வமும்
விழவரு வீதியும் விண்மழை யொய்ப்பினும்
தளர்வுறுப் பூசனை சதமெனும் வாழ்க்கையும்
எங்கும் கிராம வளர்ச்சியே இலக்காய்ச்
சங்கம் பவப்பவ தாங்குஞ் சிறப்பும்
தூயவ் கொள்கைச் சான்றோர் வதியும்
தாவடி என்பது தனிப்பெரும் கிராமம்,
இக்கிரா மத்தில் எவரும் விரும்பும்
உக்ரகான் ஒருவனும் தரும சீலன்
சிவக்கொழுந் தவனுஞ் திருந்திய நற்குணம்
உவக்கும் ஒருத்தி பொன்னம் மாளைச்
சிறப்பொரு மணந்து சேய்கள் ஆக
பிறப்பதற் குரிமைப் பெற்றி பெற்ற
அன்ன லட்சுமி அவன்பின் சரஸ்வதி
மின்னிடைக் கமல ஈஸ்வரி யடுத்து
பரம ஈஸ்வரி பகர்ரா சேஸ்வரி
திரமுடைத் தவமலர் செல்வரத் தினமொடு
ஆனந்த கிருஷ்ண ன்தருப ராசன்
ஈனமில் செல்வ ராசன் இவர்பின்
இச்சகம் ஏத்தும் இளையோான்
சச்சி தன்னையும் பெற்றார் தாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருத்தப்பா

பூவின் மலர்ச்சி முகங் காட்டும்
புகழின் உயர்ச்சி குணங்காட்டும்
காவின் வளர்ச்சி உடலகாட்டும்
கனவின் முதிர்ச்சி சொல் காட்டும்
பாவின் உணர்ச்சி பதங் காட்டும்
பண்பின் வளர்ச்சி செயல் காட்டும்
சாவின் அதிர்ச்சி எமை வாட்ட
சச்சி கவலை தந்தானே.

திரைகடல் தாண்டிச் பொருள் தேடச்
சித்தங் கொண்டே எமக்கொன்றும்
உரையா தோரா துன்விருப்பாய்
உலகஞ் சுற்றும் பாஸ்போட்டை
விரைவாய்ப் பெற்று வீடுவந்து
வேண்டி எம்மைப் பணிவாகத்
தருவீர் பணத்தை இதமுடனே
தாவச் ஜேர்மன் நகரென்றாய்

நீயும் கொண்ட விருப்புடனே
நீண்ட பயணம ஜேமனிக்குப்
போயும உழைத்து ஒருவருடம்
பொங்கிக் களிக்க வைத்தாயே
சாயுங்காலம் வருமென்று
சாற்றுஞ் சோதிடம் கூறிற்றே
நோயும் வந்து படுக்கையிலே
நொந்து மனமும் துடித்தாயோ

புத்திரனே நீ வருந்துகையில்
புனிதராய நின் தோழர்
பத்திரமாக நின் பக்கம்
பரிவுடன் நிதமும் அணைக்கையிலே
எத்தனை எத்தனை எண்ணினையோ
எங்களை எண்ணி ஏங்கினையோ
பத்தெனச் சோதரர் இருந்தாலும்
பாலினைப் பருக்கிட முடிந்ததிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னலட்சுமி சரஸ்வதியும்
அன்புக் கமல ஈஸ்வரியும்
பன்னு பரம் ஈஸ்வரியும்
மாலை ராச ஈஸ்வரியும்
கன்னிப் பருவத் தவமலரும்
கவிஞர் அன்பு மிகச்செலுத்தி
நின்னைத் தம்பி என நிறுத்தி
நிற்கக் கொடுத்து வைத்திலரே.

அண்ணன் செல்வரத்தினமும்
ஆனந்த கிருஷ்ணன் அவரோடே
என்னுந் தரும ராசனுடன்
இளையவன் செல்ல ராசனுமே
கண்ணின் மணியே கரும்புதரக்
காய்ச்சிய சுவையாம் கற்கண்டே
தண்ணர் அமுதெம் தம்பியெனத்
தழுவ வரென்றே தவித்தாயோ.

அத்தான் மாராம் தம்பிராசா
அருமை இராச ரத்தினமும்
சித்தம் கனிக்கும் ஜெகராசா
சிங்கம் சண்முக ரத்தினமும்
மைத்துனி சொர்ண காந்தியுடன்
மற்றைச் சரோஜா தேவியுமே
பித்துப் பிடித்துத் துடிப்பரென
பெரிதும் நினைத்து வருந்தினையோ

குணத்தாற் பெரிய குன்றனாய்
கூறும் கலங்கரை விளக்கானாய்
பணத்தாற் பெருமை காண்பதற்கோ
பறந்தாய் யேமன் நகர் நாடி
மணத்தால் வாழ்வு நுகர்ந்தறியாய்
மடியச் சிக்ஷை செய்தாரோ?
பிணத்தை இங்கு காண்பதற்கோ
பிரமன் நின்னைப் படைத்திட்டான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோளொடு தோளாய் கைகொடுக்கும்
தோழர்கள் இங்கு சுற்றியழ
ஆளின் பொலிவை ஆற்றுமல்
அன்னை அயலார் அலறிறழ
நீளும் மற்ற உறவினர்கள்
நினைத்து நெக்கிப் பொருமியழ
வாழும் உலகை வெறுத்தேனோ
வானோர் உலகை விரும்பினையோ;

அவலம் உற்றோ யேமனியில்
ஆவி பிரிந்த அந்நேரம்
நவரத் தினமும் நண்பர்களும்
நல்கிய உதவி நாமறிந்தோம்
உவமை சொல்லா முறையினிலே
உடலை ஜேமன் சேர்ச்சினிலே
எவரும் அஞ்சலி செயவைத்தும்
ஈறறில இங்கே அனுப்பினரே.

தனியா விமானம் ஒன்றினிலே
தாமே நின்று முழுமுச்சாய்
புனித வெள்ளிப் பெட்டியிலே
போற்றி யுடலைப் புகச்செய்து
மனிதப் பண்பைக் காப்பாற்றி
மாற்று நாடாம் யேமனியின்
புனிதப் பண்பை நாம் எண்ணிப்
போற்றித் துதிக்க வைத்தாயே.

பண்பு குன்றாப் பொதுத் தொண்டின்
பணிகள் செய்த பாங்குணர்ந்து
நண்பர் சுற்றம் புடைசூழ்ந்து
நல்கிய உதவி நாடறியும்
கண்டோர் விரும்பு காளையுனைக்
காலன் கணக்குப் பார்த்தானோ
எண்பதா மாண்டு வைகாசி
எழுதிய தேதியும் பதினேழே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது கட்டளைக் கலித்துறை

நேரிய பார்வை நிமிர்நடைச் சச்சி
தானந்தனே
சீரிய நெற்றிச் செவ்விதழ் மோவாய்
செப்பரிய
கூரிய வேல்விழி குறுநகை
முத்து நிரைசெய்யும்
பாரிய திண்புயம் என்றினிக்
கண்டு பழகுவதே.

## தோற்றம்

எழுகடல் மணலை அளவிடலாம்
எமதிடர் பிறப்பிற் களவில்லை
கழுகொடு நரியும் எரிபுலியும்
கமலனும் மக்களும் அயர்வாறுன்
எழுதினன் இதனை அருணகிரி
எள்ளத் தனையிதை நாமுணர்ந்து
விழுமிய ஈசன் கழலடியை
வேண்டுதல் செய்து தோற்றுவமே.

எத்தனை கோடி யுடலெடுத்தோம்
அத்தனை கோடியும் அழிவுற்றோம்
எத்தனை மோக ஆசையுள்ளோம்
அத்தனை யாவும் புற்பதமே
எத்தனை மாயை மயக்கமென
இத்தரை மீதில் உணர்ந்தோமேல்
எத்தனை பெரிய உண்மையடா
இத்தரை எம்மனம் தோற்றுவதே.

புற்புகம் என்பது நம்வாழ்க்கை
புத்திரர் வீடு மனைவியரும்
சுற்றமும் மற்றைச் சுக மெல்லாம்
சொப்பனம் என்பது தோன்றுதடா
அற்புதம் என்பதற் கொன்றுமில்லை
ஐயோ என்பதில் அர்த்தமில்லை
தற்பரன் பாதம் நிலையென்று
சார்ந்தனன் சச்சி சரணென்றே.

ஆக்கம் - சேந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவக்கொழுந்து சச்சிதானந்தன் அவர்களின்
மறைவு குறித்து
## தாவடி சைவ இளைஞர் சங்கத்தின்
## அனுதாபத் தீர்மானம்

எமது ஊர்வாசியும் தாவடி சைவ இளைஞர் சங்க நிர்வாக சபை உறுப்பினருமாகிய செல்வன். சி. சச்சிதானந்தன் (சச்சி) அவர்களின் மறைவு குறித்து மேற்படி எமது சங்கம் அன்னாரின் ஆத்மா சாந்திக்கு இதயபூர்வமாக பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தினர்க்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றது.

தன்னலமற்ற சேவைக்கும், எமது சங்கத்துக்கு மேற்கு ஜேர்மனியில் இருந்து ரூபா 4000- கட்டிட நிதியாக சேர்த்து அனுப்பியதை எமது சங்கம் மறக்க முடியாது அவர் கட்டிவெழுப்பிய இளைஞர் ஒற்றுமையை நாம் என்றும் மறக்க மாட்டோம். அவரின் புகழுடம்பு என்றும் எமது உள்ளங்களில் வீற்றிருக்கும். அமர ஜோதியின் ஆத்மா சாந்தியடைய மீண்டும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இரா. சந்திரசேகரம். (தலைவர்) | பொன். சுப்பிரமணியம். (செயலாளர்) | க. விவேகானந்தா (பொருளாளர்)

---

## நன்றி நவிலல்

மேற்படி அன்னாரின் பிரிவின்போது சமுகமளித்தவர்களுக்கும் ஈமக்கிரியை, அந்தியேட்டி வீட்டுக் கிருத்தியங்களில் கலந்துகொண்டவர்களுக்கும், தபால் தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்,

தாவடி,
கொக்குவில்.

சி. சிவக்கொழுந்து
குடும்பத்தினர் அனைவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org